ஓம் சரவணஜோதியே நமோ நம

மகான் ஆறுமுக அரங்கமகானின் ஐப்பசி முழுமதி விழா ஆசி நூல்

25.10.2026

1. அருள் வடிவான சிவத்தைப் போற்றி
அறிவிப்பேன் அரங்கன் யான் அருளாசி
வரமாக பராபவ ஆண்டு ஐப்பசி திங்கள்
பௌர்ணமி பூஜை விழா பலனாகவும்

2. ஓங்காரக்குடிலின் நிர்வாகத்திற்கும் தர்மத்திற்கும்
தொண்டர் பெருமக்கட்கும் இனிதே
அரங்கன் யான் ஆசிதனை உரைப்பேன்
வகைபட ஐப்பசி பௌர்ணமி விழா

3. ஆறுமுகப்பெருமான் தலைமையேற்று நடத்த
ஞானியர் படைகளெல்லாம் வந்து ஒன்றிணைந்து
இவ்விழாவை சிறப்பிக்க அரங்கன் யானும்
மகிழ்ந்து இனிதே சரவணஜோதி வழி

4. அற்புதத்தை தொண்டர் பெருமக்கட்கு
சிறப்பாக நடத்தி அருள்வேன்
அருளவே இவ்விழாவில்
அன்பர்களோடு அன்பர்களாக

5. ஞானியர்களும் சூட்சுமமாய் வந்து
ஓங்காரக்குடிலின் நிர்வாக செயல்பாட்டையும்
அன்னதான பணியையும் அருமருந்தையும்
சுவைபட இனிதே உண்டு மகிழ்ந்து

6. ஆசி தர உள்ளனர்
அச்சமற இவ்விழா இனிதே சிறக்க
அரங்கன் என் பரிபூரண ஆசியுண்டு
ஆசிதனை அன்னதான பணிகள்

7. தடைபடா வண்ணம் தொடர்ந்து
அதற்குண்டான தாராள தனபுழக்கமும்
தொண்டர் பெருமக்கட்கு
வசூல் பணிகள் சிறந்து

8. வசூல் தொகை பெருக இனிதே
தர்மப்பணி சிறக்கவும் நிர்வாகத்தில்
அன்பர்கள் அகமகிழ்ந்து இனிதே
நிர்வாகத்தோடு இணக்கமுடன்

9. தொண்டர்களெல்லாம் இணைந்து
முழுசரணாகதியோடு செயல்படவும்
அரங்கன் என் பரிபூரண ஆசியுண்டு
எந்தன் அருளாசியோடு தொண்டர் பெருமக்களும்

10. உலகளாவிய வண்ணம் மக்கள் பெருங்கூட்டமும்
ஓங்காரக்குடிலில் தொடர்ந்து நடத்துகின்ற
ஒவ்வொரு விழாவிற்கும் வருகை புரிந்து
இந்த விழா அனைத்தும் சிறக்கவும்

11. வருகின்ற அன்பர்கட்கு அனைத்து
வரங்களும் கிட்டவும் பயண பாதுகாப்போடு
அன்னதான வாகனங்கள் அனைத்திற்கும்
அரங்கன் என் அனுகூலம் ஆசியும் உண்டு

12. சிந்தைபட துறையூர் குடில்
இதனோடு தொடர்பு கூட்டி
அருகாமையில் உள்ள
அனைத்து கிராமங்களிலும்

13. குறையில்லா வண்ணம் தர்மம் பரவி இனிதே
ஓங்காரக்குடிலின் அன்னதானம் வளரவும்
தடைபடா வண்ணம் தொடர்ந்து
மக்களெல்லாம் பசிப்பிணி நீங்கி இனிதே

14. சன்மார்க்க வழி தழைக்கவும்
அரங்கன் என் பரிபூரண ஆசியுண்டு
ஆசி தந்தேன் இனிதே
நிர்வாகத்தின் சிறப்பிற்கும்

15. தொண்டர் பெருமக்களின்
உயர்வான உழைப்பிற்கும்
வந்து கலந்து இனிதே தர்மத்தில்
பங்களிப்பு செய்யும் அன்பர்கட்கும்

16. அரங்கன் யான் உற்ற துணையாய்
அனுகூலம் தந்து ஆசியும்
அவர்கட்கு உண்டான
வேண்டும் வரங்களுக்கு சித்தியும்

17. தந்தருள் புரிகின்றேன் இனிதே இவ்விழா சிறக்கவும்
இவ்விழாவின் வழி அன்பர்களெல்லாம் நாடி வருகின்ற

ஒவ்வொரு கிளைச்சங்கங்களிலும் பொருளாதார பலமும்
தொண்டர்களுடைய செயல்கள் சிறந்தும்

18. கிளைகள் அத்தனையும் இன்னும் விரிவடைந்தும்
இனிதே தர்மம் உலகளாவிய வண்ணம் பரவவும்
தர்மம் பெருகி உலகமெங்கும் வளமும் பசுமையும்
மழை வளம் குன்றாத வண்ணம் இனிதே

19. எல்லா வளமும் பெற பரிபூரண ஆசியுண்டு
உலக பாதுகாப்புக்கும் இன்று அரங்கன் யான்
ஆசி தந்துள்ளேன் நல்ல தலைமையும்
நல்ல ஆளுமையுமாக உலகம் மாற்றம் கண்டு

20. எங்கும் சன்மார்க்க நெறி
இனிதே பரவ அரங்கன் யான்
அருள் செய்வேன் அரங்கன்
யான் அருளிய ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி